# Chapter 3 நகராட்சி மற்றும் மாநகராட்சி

---

## அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**Question 1.**
தமிழ்நாட்டின் மிகப்பழமையான மாநகராட்சி __________ ஆகும்.
விடை:
சென்னை

**Question 2.**
உள்ளாட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் __________
விடை:
ரிப்பன் பிரபு

**Question 3.**
__________ ஆம் ஆண்டு பல்வந்த்ரா ராய் மேத்தா குழு அறிக்கையின்படி இந்தியாவில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
விடை:
1957

**Question 4.**
நகராட்சியின் பணிக்காலம் __________ ஆண்டுகள் ஆகும்.
விடை:
ஐந்து

## ஆ. பொருத்துக.

1. கிராமப்புற உள்ளாட்சி – குடவோலை
2. ரிப்பன் கட்டிடம் – நகரியம்
3. நெய்வேலி – கிராம ஊராட்சி
4. சோழர்கள் – மாநகராட்சி
5. மேயர் – ரிப்பன் பிரபு

விடை:

1. கிராமப்புற உள்ளாட்சி – கிராம ஊராட்சி
2. ரிப்பன் கட்டிடம் – ரிப்பன் பிரபு
3. நெய்வேலி – நகரியம்
4. சோழர்கள் – குடவோலை
5. மேயர் – மாநகராட்சி

## இ. காலி இடங்களை நிரப்புக.

**Question 1.**

| வ.எண். | | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1 | தலைவர் | நகராட்சியின் தந்தை | |
| 2 | எண்ணிக்கை | | 14 |
| 3 | பணிக்காலம் | | |
| 4 | அதிகாரிகள் | ஆணையர் | |
| 5 | வருவாய் | | தொழில் வரி |

விடை:

| வ.எண். | | நகராட்சி | மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | தலைவர் | நகராட்சியின் தந்தை | மேயர் |
| 2. | எண்ணிக்கை | 152 | 14 |
| 3. | பணிக்காலம் | 5 ஆண்டுகள் | 5 ஆண்டுகள் |
| 4. | அதிகாரிகள் | ஆணையர் | இந்திய நிர்வாக அதிகாரிகள் |
| 5. | வருவாய் | சொத்து வரி | தொழில் வரி |

## ஈ. சுருக்கமாக விடையளிக்கவும்.

**Question 1.**
மாநகராட்சியின் பணிகள் யாவை?
விடை:
நகரச் சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

- குடிநீர் வசதிகளை அமைத்தல்.

- குப்பைகளை அகற்றுதல்.
- நூலகங்களை அமைத்துப் பராமரித்தல்.
- பூங்காக்களை அமைத்துப் பராமரித்தல்.
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளைப் பராமரித்தல்

**Question 2.**
நகராட்சியின் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் படுகிறார்?
விடை:
நகராட்சியின் தலைவர் 'நகராட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

நகராட்சியின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். நகராட்சி உறுப்பினர்களின பணிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். நகராட்சியின் உறுப்பினர்களில் ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**Question 3.**
தமிழ்நாட்டில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை யாது?
விடை:
தமிழ்நாட்டில் 14 மாநகராட்சிகள் உள்ளன.

**Question 4.**
நகராட்சியின் வருவாய் ஆதாரங்கள் யாவை?
விடை:
தனது பணிகளை நகராட்சி மேற்கொள்வதற்கு மத்திய, மாநில அரசுகள் நிதி வழங்குகின்றன. மேலும் மக்கள் செலுத்தும் வீட்டுவரி, தொழில் வரி, குடிநீர் வரி, கடை வரி, சாலைவரி மற்றும் கழிவுநீர் அகற்றல் வரி போன்ற வரிகளின் மூலமும் வருவாய் கிடைக்கிறது.